# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.118/2022**
**PW2**

| | | |
|---|---|---|
| Name | : | ராமன் |
| Father's/Husband's Name | : | சேட்டு |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.06.2025.
A1,2, 4 to 7 present.

**முதல் விசாரணை**

நான் வீராணந்தல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . நான் திருப்பூரில் வேலை தச்சு வேலை செய்து வருகிறேன் . ஆஜர்எதிரிகளை தெரியும். அனைவரும் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள். கடந்த 2021 ம் வருடம் நான் வீட்டில் இருந்தபோது வெளியே பேசிக்கொண்டிருந்தார்கள் . நான் போய் பார்த்தபோது சண்டை ஏற்பட்டதாகவும், வெங்கடேஷ் என்பவர் மருத்துவமனையில் இருந்ததாகவும் சொன்னார்கள். நான் மருத்துவமனையில் சென்று பார்த்தபோது அவர் உயிருடன் இல்லை. யாரால் காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது . சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.09.2021 ஆம் தேதி இரவு 9.30 மணியளவில் இறந்துபோன வெங்கடேசன் என்பவருடன் தர்மா உட்கார்ந்து கொண்டு அவருக்கு பின்னால் நாங்கள் மற்றுமொரு இருசக்கர வாகனத்தில் ஸ்ரீராம் , மணி ஆகியோருடன் நான் உட்கார்ந்து கொண்டு ஜீ .என் பாளையத்தில் இருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது, புதுப்பாளையம் மெயின் ரோடு TNCC குடோன் அருகே கல்லாற்று ஓடை தரைப்பாளத்திடம் நாங்கள் வந்துகொண்டிருந்தபோது அங்கு வழியில் TN25BM4194 என்ற Bolero pickup van நின்று கொண்டிருந்ததாகவும், அதற்கு பக்கத்தில் மதி , சுரேஷ் நின்று கொண்டிருந்ததாகவும் , அதற்கு பக்கத்தில் இருசக்கரவாகத்தில் அங்கு வந்த வினோத் , ஏழுமலை ஆகீயோர் எங்களை மறித்து நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த வசந்தும் , வல்லரசும் எங்களை சுற்றி வளைத்தவுடன் நாங்கள் அனைவரும் தப்பி ஓடி , செடியில் மறைந்திருந்து பார்த்தபோது எனக்கு பின்னால் வந்த வெங்கடேசன் கால் தடுமாறி கீழே விழுந்தவுடன் எதிரிகள் மதி , வினோத், சுரேஷ் வீச்சறுவாளை கொண்டு வெங்கடேசனை பார்த்து ஆபாசமாக பேசி மதி என்பவர் அன்னிக்கு என் கையை வெட்டுன அதனால எனக்கு கை இல்லை உன்னை இன்னைக்கு வெட்டி சாய்த்தால்தான் என் ஆத்திரம் அடங்கும் என சொல்லிக்கொண்டு முன்பக்க தலை , வலது பக்க கழுத்து, வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த வசந்த் அறிவாளால் வலது தோள்பட்டை , இடது தோள்பட்டை , இடது முழங்கை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , சுரேஷ் வீச்சறுவாளால் வெங்கடேசனின் இடது கால், வலது கால் ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த ஏழுமலை , வினோத், வல்லரசு வெங்கடேசனை விட்டுவிடாமல் வழிமறித்தும், இருந்தபோது அதை நான் நேரில் பார்த்துவெங்கடேசனின் தந்தை முருகன் என்பவருக்கு தகவல் சொன்னேன் என்றும் , உடனே அங்கு வந்த வெங்கடேசனின் தந்தை முருகன் , வெங்கடேசன் மனைவி ரத்னா ஆகியோர்கள் வெட்டுகாயத்துடன் இருந்த வெங்கடேசனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவனைக்கு கொண்டு சேர்த்ததாகவும் , அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாகவும் மருத்துவர் கூறினார் என்றும் , இது சம்மந்தமாக வெங்கடேசனின் தந்தை முருகன் புதுப்பாளையம் காவல் நிலையத்தில் ஆஜர்

எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும் , அதன்பேரில் வழக்கு பதிவு செய்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் , போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.